DINATHANTHI

22 APR 2022

PAGE 8

# பல்கலைக்கழகத்தில் ரூ.48½ கோடியில் 3 கட்டிடங்களுக்கு அடிக்கல்

புதுச்சேரி பல்கலைக்கழக கலாசார மையத்தில் அரவிந்தரின் 150-வது ஆண்டு விழா வருகிற 24-ந் தேதி நடக்கிறது. விழாவில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, பல்கலைக்கழகத்தின் முதன்மை தலைவரும், கவர்னருமான தமிழிசை சவுந்தர ராஜன், முதல்-அமைச்சர் ரங்கசாமி, அமைச்சர்கள், எம்.பி.க்கள் மற்றும் பலர் கலந்துகொள்கிறார்கள்.

விழாவையொட்டி மத்திய மந்திரி அமித்ஷா, புதுவை பல்கலைக்கழகத்தில் ரூ.48 கோடியே 66 லட்சம் மதிப்பில் 3 புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். அதன்படி 2,835 சதுர மீட்டரில் ரூ.13 கோடியே 30 லட்சம் செலவில் இயற்பியல் துறைக்கான இணைப்பு கட்டிடமும், 3,260 சதுர மீட்டரில் ரூ.15 கோடியே 58 லட்சம் மதிப்பில் வேதியியல் துறைக்கு இணைப்பு கட்டிடமும், 4,909 சதுர மீட்டரில் ரூ.19 கோடியே 78 லட்சம் மதிப்பில் உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறைக்கு கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்படுகிறது.

DINAMALAR

22 APR 2022

PAGE 2

# ரூ. 48.66 கோடியில் 3 கட்டடங்கள் அமித்ஷா அடிக்கல் நாட்டுகிறார்

**புதுச்சேரி, ஏப். 22–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், ரூ. 48.66 கோடி மதிப்பில் புதிதாக 3 கட்டடங்கள் கட்டுவதற்கு, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வரும் 24ம் தேதி அடிக்கல் நாட்டுகிறார்.

பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் ரூ. 48 கோடியே 66 லட்சம் மதிப்பீட்டில் மூன்று கல்விக் கட்டடங்கள் அமைப்பதற்கு, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வரும் 24ம் தேதி அடிக்கல் நாட்டுகிறார்.

இதில், இயற்பியல் துறைக்கு ரூ.13.30 கோடி மதிப்பீட்டில் இணைப்பு கட்டடங்கள், வேதியியல் துறைக்கான இணைப்புக் கட்டடங்கள் ரூ.15.58 கோடி மதிப்பீட்டில் அமைய உள்ளது.

உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கான புதிய கட்டடம் ரூ.19.78 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகிறது.

இந்த விழாவுடன், அரவிந்தரின் 150வது பிறந்த நாள் விழாவும் பல்கலைக்கழக கலாசார மையத்தில் நடக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

THE NEW INDIAN EXPRESS

22 APR 2022

PAGE 3

# Shah to take part in birth anniv of Sri Aurobindo

PUDUCHERRY: Home Minister Amit Shah, who would be on a day's visit to Puducherry on April 24, would participate in the celebrations of the 150th birth anniversary of revolutionary-turned-philosopher and saint Aurobindo here.

A release from the Assistant Registrar of the Puducherry University K Magesh said on Thursday that the Home Minister would also lay foundations of annexe buildings of the Departments of Physics and Chemistry and for the new premises of the Department of Food Science and Technology.

Lieutenant Governor of Puducherry Tamilisai Soundararajan, Chief Minister N Rangasamy, vice-chancellor of the university Gurmeet Singh, Members of Parliament from Puducherry and Ministers would be present. Official sources said Shah would also launch projects later under the Smart City project. BJP sources said Shah would address party office-bearers before wrapping up his visit. PTI

DINAKARAN

22 APR 2022

PAGE 6

புதுவை பல்கலைக்கழகத்தில்

# ₹48.66 கோடி மதிப்பில் மூன்று கல்வி கட்டிடம்

## உள்துறை அமைச்சர் அமித்ஷா அடிக்கல் நாட்டுகிறார்

புதுச்சேரி, ஏப். 22: புதுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கடந்த 2017ம் ஆண்டு குர்மீத் சிங் பொறுப்பு ஏற்றதிலிருந்து பல்கலைக்கழக வளாகக் கட்டிடங்களையும் உள்கட்டமைப்பையும் விரிவுபடுத்துவதில் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். கடந்த ஐந்தாண்டுகளாக நடைபெற்று வரும் முன்னேற்றங்களுக்கு மேலும் மெருகூட்டும் வகையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வரும் 24ம் தேதி ரூ.48.66 கோடி மதிப்பிலான மூன்று கல்விக் கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். இயற்பியல் மற்றும் வேதியியல் துறையின் இணைப்புக் கட்டடடங்களுக்கும்,



பல்கலைக்கழகத்தின் முதன்மை வளாகத்தில் உள்ள உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கான புதிய கட்டடத்திற்கும் அடிக்கல் நாட்டப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன், முதல்வர் ரங்கசாமி, அமைச்சர்கள், எம்பிக்கள், புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங், எம்எல்ஏக்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர். இதில் இயற்பியல் துறைக்கான இணைப்பு கட்டிடங்கள் ரூ.13.30 கோடி மதிப்பீட்டிலும், வேதியியல் துறைக்கான இணைப்பு கட்டிடங்கள் ரூ.15.58 கோடி மதிப்பீட்டிலும், உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கான கட்டிடம் ரூ.19.78 கோடி மதிப்பீட்டிலும் அனைத்து அதிநவீன வசதிகளுடன் கட்டப்படவுள்ளது. புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் மூன்று கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழாவுடன், அரவிந்தர் ஆசிரமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தத்துவமேதை அரவிந்தரின் 150வது பிறந்த நாள் விழாவும் பல்கலைக்கழக மாநாடு மற்றும் கலாசார மையத்தில் நடைபெறுகிறது.